★ அமித் அகர்வால் ★ ஷ்ரதக் பரத்வாஜ்

# விஐடியின் 2 மாணவர்களுக்கு ரூ. 1 கோடியே 2 லட்சம் சம்பளத்தில் வேலை: 'மோட்டார்க்யூ' நிறுவனம் வழங்கியது


சென்னை, ஜூலை.27–

விஐடியில் அடுத்து கல்வியாண்டின் (2023) வேலைவாய்ப்பு முகாம் கடந்த 12ந் தேதி துவங்கியது. இதில் சர்வதேச பெரு நிறுவனங்களான மைக்ரோசாப்ட் டி.இ.ஷா, மோர்கன் ஸ்டான்லி, ஏர். பி.என்.பி. மற்றும் மீடியா.நெட் ஆகியவை பங்குபெற்றன.

விஐடி வேலூர், சென்னை, அமராவதி (ஆந்திரா) மற்றும் போபால் (மத்திய பிரதேசம்) மாணவ, மாணவிகளை வேலை வாய்ப்பு முகாம்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டன. இதில் வேலைவாய்ப்புக்கான முதல் கட்டமாக நிறுவனத்தைப் பற்றிய தகவல்கள், வேலைக்குத் தேவைப்படும் திறன்கள், மாணவ, மாணவிகளுக்கு தேவையான மனித வளப் பயிற்சி நேரடியாகவும், இணையம் மூலமாகவும் தேர்வுகள் நடைபெற்றன.

முதற்கட்ட தேர்வு முடிவுகளை விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் வெளியிட்டார். சர்வதேச தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாப்ட் நிறுவனம் 45 மாணவ, மாணவிகளை தேர்வு செய்தது. அதேபோல் டி.இ.ஷா, மோர்கன் ஸ்டான்லி, ஏர் பி.என்.பி. மீடியா. நெட், ஆகிய நிறுவனங்களும் மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கின.

மோட்டார் க்யூ என்ற நிறுவனம்



அமித் அகர்வால் (CSE), ஷ்ரதக் பரத்வாஜ் (CSE) ஆகிய 2 மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.1 கோடியே 2 லட்சம் ஆண்டு சம்பளத்திற்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இம்முகாமின் முதல் கட்டத்தில் தொடர்ச்சியாக பெரு நிறுவனங்களான அமேசான், டெக்சஸ் இன்ஸ்ட்ருமெண்ட், வால்மார்ட் லேப்ஸ் போன்ற நிறுவனங்கள் முகாமில் பங்கு பெற உள்ளன.

184 மாணவ, மாணவிகள் நிறுவனத்தில் தொழில் பயிற்சி பெறும்போதே வேலை வாய்ப்புக்கான ஆணைகள் வழங்கப்பட்டன. பின்வரும் பெருநிறுவனங்கள் மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கியுள்ளது. மைக்ரோசாப்ட் –22, டி.இ.ஷா –2, பிடிலிடி முதலீடு நிறுவனம் – 24, ஜே.பி. மோர்கன் – 82, வெல்ஸ் பார்கோ – 8, இன்போசிஸ் –7, தி மேத் – 32 மற்றும் ஸ்னைடர் எலக்ட்ரிக் – 7.

ஆண்டுக்கு 10 லட்சத்திற்கும் மேல் சம்பளம் உள்ள வேலை வாய்ப்புகள் 175 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் முழுவதும் 10 லட்சத்திற்கும் மேல் சம்பளம் வழங்கும் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடைபெறும்.

இந்த முகாமில் ஷெல், ஆரக்கள், பிலிப்கார்ட், மேக் மை ட்ரிப், நீல்சன் சாப்ட் லேப்ஸ், உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் பங்கு பெறுகின்றன.

இந்தியாவிலேயே முதன்முறையாக அமேசான் நிறுவனம் விஐடி மாணவ, மாணவிகள் 110 பேருக்கு தொழில் பயிற்சி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. டி.சி.எஸ். நிறுவனம் நடத்திய தேசிய தகுதித் தேர்வில் 4 ஆயிரத்து 630 மாணவ, மாணவிகள் தகுதி பெற்றுள்ளனர். முதுகலை (எம்.டெக்.(2yrs), எம். டெக்.(5yrs Software Engineering), எம். சி.ஏ., மாணவ, மாணவிகளுக்கான வேலைவாய்ப்பு முகாம் மார்ச் மாதம் தொடங்கியது. இதில் 88 பெருநிறுவன நிறுவனங்கள் 1204 மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி உள்ளது. விஐடி வேந்தர்கோ. விசுவநாதன் வேலை வாய்ப்பு வழங்கிய நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்பு பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.



## தமிழ்ப் புத்தக நண்பர்கள் சார்பில்

# எழுத்தாளர்கள் தாமரை ஹரிபாபு, ராஜேஷ் குமாருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

சென்னை, ஜூலை 27–

தமிழ் புத்தக நண்பர்கள் சார்பில் எழுத்தாளர்கள் தாமரை ஹரிபாபு, ராஜேஷ் குமாருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை நீதிபதி ஸ்ரீமதி பிரபா ஸ்ரீதேவன் வழங்கினார்.

தமிழ் புத்தக நண்பர்கள் அமைப்பின் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் விழா ஆழ்வார்பேட்டை டேக் சென்டரில் நடைபெற்றது. விழாவில் மணிமேகலை பிரசுரம் நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் வரவேற்புரையாற்றினார். ஆர்.டி. சாரி, ஆர்.வி. ராஜன் இணைப்புரை நிகழ்த்தினர்.

விழாவில் தமிழ் எழுத்தாளர்கள் தாமரை ஹரிபாபு, ராஜேஷ்குமார் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர்கள் விருதும், ரூ. 75 ஆயிரம் ரொக்கப் பரிசையும் நீதிபதி ஸ்ரீமதி பிரபா ஸ்ரீ தேவன் வழங்கினார்.

எழுத்தாளர் ராஜேஷ்குமார் பற்றிய அறிமுறை உரையை மணிமேகலை பிரசுர ஆசிரியர் லேனா தமிழ்வாணன் நிகழ்த்தினார். டாக்டர் தாமரை ஹரிபாபு பற்றிய அறிமுக உரையை லேடிஸ் ஸ்பெஷல் கிரிஜா ராகவன் ஆற்றினார். எழுத்துலக ஜாம்பவான் ராஜேஷ்குமாரை நாடே அறியும்.

டாக்டர் தாமரை ஹரிபாபு கீழாநிலைக்கோட்டைக் கிளிகள் மருது பாண்டியரின் வீரத்தின் வேள்வித் தீ, வேல்விழியும், வேலூர் சிப்பாய்ப் புரட்சியும் என்ற சரித்திர நாவல்களை அரிய சரித்திர ஆவணங்களாக ஆய்வு செய்து எழுதியுள்ளார். வாஷிங்டன் உலகத் தமிழ் பல்கலைக்கழகம் இவர் எழுத்துக்களை மும்முறை பாராட்டிப் பரிசுகளும் கேடயங்களும் அளித்து சிறப்பித்துள்ளது. 'உயர்தனிச் செம்பொழி தமிழர்' என்ற நூல் மிகவும் பாராட்டுப் பெற்று பரிசுகள் பெற்றும் சாதனை படைத்துள்ளது. மகாத்மா காந்திக்கும் பெரியாருக்கும் உள்ள அரிய ஒற்றுமைகள் என்ற இவரது நூலுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. இவரது கணவர் ஹரிபாபு. மகன் டாக்டர் வி.எச். குலசேகரன் காவேரி மருத்துவமனையில் பணியாற்றுகிறார். மகள் எல். நந்தினி ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் மருத்துவமனையில் பணியாற்றுகிறார்.

நிகழ்ச்சியின் முடிவில் கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் நன்றியுரை ஆற்றினார்.

# 240 கலைச் சொற்களுக்கு வல்லுநர் குழு ஒப்புதல்

சென்னை, ஜூலை 27–

தமிழக அரசின் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில் நடைபெற்ற தமிழ்க் கலைக்கழகத்தின் 114வது கூட்டத்தில் 240 கலைச் சொற்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் தமிழ்க் கலைக்கழகத்தின் 114வது கூட்டம் அகரமுதலி இயக்கக இயக்குநர் கோ.விசயராகவன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சவூதி அரேபியா மெய்நிகர் தமிழிருக்கையின் முதன்மை அறிவியல் ஆலோசகர் பேராசிரியர் மருத்துவர் மு.செம்மல் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். அலுவல் சாரா உறுப்பினர்களான புலவர் வெற்றியழகன், கு.பாலசுப்பிரமணியன், இரா.கு. ஆல்துரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்

இதையடுத்து *Actinotherapy* கதிரிய மருத்துவம்; *Airbyte* தரவல் தொகுப்பி; *Awesome sauce* நறுஞ்சுவைச் சாறு; *Blogpost* வலைப்பூப் பதிவு; *Depth ensor* ஆழம் உணரி; *Hospitality staff* விருந்தோம்பல் ஊழியர்; *Jumpsuit* காப்புடை ஆகியவை உள்பட 240 தமிழ்க் கலைச் சொற்களுக்கு வல்லுநர் குழு ஏற்பளித்துள்ளது என இயக்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## விற்பனை அறிவிப்பு

**சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)**

CIN : L21012TN2005PLC092783

பதிவு அலுவலகம் : கொடகநல்லூர் கிராமம், வடுகன்பட்டி அஞ்சல், ஐ.சி.பேட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு – 627010

**மின்னணு ஏலம்**

நிறுவன கடன்தாரரின் சொத்துக்களை (Going Concern ஆக) விற்பதற்கு நொடித்தல் மற்றும் கிராமம் திவால் சட்டத் தொகுப்பு 2016–ன் கீழ் மாண்புமிகு தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் (NCLT), சென்னை பெஞ்ச் 26.11.2021 மற்றும் 02.06.2022 தேதியிட்ட ஆணையின்படி விற்பதற்கான அறிவிப்பு

IBBI கட்டுப்பாடுகள் 2016 (கலைத்தல் நடைமுறை) விதிமுறை 32(e)–ன் கீழ் M/s. சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட் (கலைப்பில் உள்ளது) ('நிறுவன கடன்தாரர்') சொத்துக்களை விற்பனை செய்வதற்கான ஏல அழைப்பு என்னவென்றால் 'எது எங்கு அல்லது எப்படி உள்ளதோ, அதை அப்படியே' என்ற முறையில் அச்சொத்துக்களின் ஏல விற்பனை நடத்தப்படும். இது மாண்புமிகு தேசி நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் 24.04.2018 தேதியிட்ட ஆணைப்படி நியமிக்கப்பட்ட கலைப்பலுவலரால் நடத்தப்படும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் முழுமையான மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் உள்ள ஏலம் தொடர்பான விதிமுறை விவரங்கள், ஏல படிவம், தகுதி வரம்பு, ஏலதாரர்களின் அறிவிப்பு உள்ளிட்டவற்றை பார்த்து, அதற்குட்படுதல் வேண்டும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் திரும்பப்பெறும் வட்டியில்லா Participation Deposit மற்றும் வட்டியில்லா டேவணித் தொகை போன்றவைகளின் விவரங்களை நிறுவன கடனாளரின் இணையதளம் www.servalakshmi.co.in மற்றும் சேவை வழங்குநர் இணைய தளத்தில் பார்க்கவும். மின்னணு ஏல விற்பனை www.ncltaction.auctiontiger.net இணையதளம் மூலம் கூறப்பட்ட மின்னணு ஏல செயல் முறை ஆவணத்திற்கு உட்பட்டு விற்பனை நடத்தப்படும். பொருந்தக்கூடிய ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகள் கூடுதலாக செலுத்த வேண்டும்.

| சொத்து | பார்வையிடும் நாள் | மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் | ரிசர்வ் விலை (INR) | டேவணித் தொகை & கடைசி தேதி (INR) | ஏல அதிகரிப்பு தொகை (INR) |
|---|---|---|---|---|---|
| கொடகநல்லூர் கிராமம், வடுகன்பட்டி அஞ்சல், ஐ.சி. பேட்டை, திருநெல்வேலி 627010-ல் அமைந்துள்ள தொழிற்சாலை வளாகத்தில் உள்ள நிலம் (தோராயமாக 349 ஏக்கர்) மற்றும் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் | 28.07.2022 முதல் 22.08.2022 வரை நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | 24.08.2022 மாலை 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | ரூ.110.00 கோடி (ரூபாய் நூற்று பத்து கோடி மட்டும்) | ரூ.11.00 கோடி (ரூபாய் பதினொரு கோடி மட்டும்) கடைசி தேதி : 22.08.2022 | ரூ.50.00 லட்சம் (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) |

விற்பனை அறிவிப்பு மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்துடன் இணைந்து படிக்கவும். மின்னணு ஏலம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள திரு. பிரவீன் தேவர், +91–9722778828. மின்னஞ்சல் : Praveen.thevar@auctiontiger.net அல்லது nclt@auctiontiger.net–ல் தொடர்பு கொள்ளலாம். விற்பனை தொடர்பான மேலும் விவரங்களை அறிந்து கொள்ள கீழ்க்கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளலாம் அல்லது csdhanapal.ibc@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். காலக்கெடு, நிபந்தனைகள், விதிமுறைகள் மற்றும் மின் ஏல செயல்முறை ஆவணத்தில் உள்ள இதர சரத்துகளில் உள்ள மாற்றங்கள் நிறுவன கடன்தாரரின் இணையதளத்தில் www.servalakshmi.co.in–ல் அறிவிக்கப்படும்.

தேதி : 27.07.2022
இடம் : சென்னை

S. தனபால்
சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்டிற்கான (கலைப்பில் உள்ளது) கலைப்பலுவலர்
IBBI Regn. No : IBBI/IPA-002/IP-N00060/2017-2018/10112
அறை எண்.103, காவேரி காம்ப்ளக்ஸ், 96/104, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
தொலைபேசி : 044 - 45530256/0257, மின்னஞ்சல் : csdhanapal.ibc@gmail.com



## டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்

TTK HEALTHCARE

பதிவு அலுவலகம் : எண். 6, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086.
CIN: L24231TN1958PLC003647 | இணையதளம்: www.ttkhealthcare.com
மின்னஞ்சல்: investorcare@ttkhealthcare.com | தொலைபேசி: +91 44 28116106

**ஜூன் 30, 2022 வரை முடிந்த முதலாம் காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு (30/06/2022) தணிக்கையாகாதது | (31/03/2022) தணிக்கையானது | (30/06/2021) தணிக்கையாகாதது | முடிந்த ஆண்டு (31/03/2022) தணிக்கையானது |
|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 20,369.23 | 20,764.23 | 17,079.12 | 79,728.33 |
| 2. | நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்பு) | 78,415.45 | 1,501.55 | 849.22 | 5,528.82 |
| 3. | நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன், விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்பு) | 78,415.45 | 1,501.55 | 849.22 | 5,777.87 |
| 4. | நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின், விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்பு) | 60,086.09 | 1,061.96 | 599.58 | 4,158.82 |
| 5. | மொத்த விரிவான வருமானம் [லாபம் / (நஷ்டம்)(வரிக்கு பின்) மற்ற விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 60,085.01 | 818.30 | 940.84 | 4,346.32 |
| 6. | சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ரூ.10/- ஒரு பங்கிற்கு) | 1,413.03 | 1,413.03 | 1,413.03 | 1,413.03 |
| 7. | ஒதிக்கீடுகள் (மறுமதிப்பீட்டு ஒதுக்கீடுகள் நீங்கலாக) முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின் படி | - | - | - | 31,108.67 |
| 8. | ஒரு பங்கிற்கான வருவாய் (ரூ.10/- ஒரு பங்கிற்கு) (தொடரும் அல்லது தொடரா நடவடிக்கைகளுக்கு) | | | | |
| | (அ) அடிப்படை பங்குகள் - ரூபாயில் | 425.23 | 7.52 | 4.24 | 29.43 |
| | (ஆ) மதிப்பு குறைந்த பங்குகள் - ரூபாயில் | 425.23 | 7.52 | 4.24 | 29.43 |

குறிப்புகள்:

(1) மேலே கொடுக்கப்பட்டுள்ள செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015-ன் கட்டுப்பாடு-33-ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, ஜூன் 30, 2022-ல் முடிவடைந்த முதல் காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளின் விரிவான அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

(2) ஜூன் 30, 2022-ல் முடிவடைந்த முதல் காலாண்டிற்கான முழு நிதிநிலை முடிவுகள் BSE Limited இணையதளம் (www.bseindia.com), National Stock Exchange of India Limited இணையதளம் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.ttkhealthcare.com) உள்ளது.

(3) இந்த நிதிநிலை முடிவுகள் காணொளி மூலம் ஜூலை 25, 2022 அன்று நடைபெற்ற தணிக்கைக் குழு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, மற்றும் ஜூலை 26, 2022 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர்கள் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(4) இந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015-ன் கட்டுப்பாடு-33-ன் கீழ் நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய பரிசீலனை செய்யப்பட்டது.

(5) (அ) நிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் லாபம்:

(i) தொழில் நிறுவன விற்பனையில் லாபம்:

மதிப்பாய்வின் காலாண்டின் போது, நிறுவனத்தின் மனித மருந்துப் பிரிவை (தொழில் நிறுவனம்) தேவையான சம்பிரதாயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, மேலும் ஸ்லம்ப் விற்பனையின் அடிப்படையில் மற்றும் இயங்கும் நிறுவனமாக ரூ.80,500 லட்சம் (நடப்பு மூலதனம் மற்றும் பிற வழக்கமான சரியமைப்பிற்கு பிறகு உள்ள இறுதி மதிப்பீடான ரூ.80,281.54 லட்சம்) மே 09, 2022 முதல் M/s BSV Pharma Private Limited (BSV)-ற்கு, மாற்றப்பட்டது.

பரிமாற்றத்திற்கான தொகையை ரொக்கமாக 74% (ரூ.59,442.51 இலட்சம்) மற்றும் வாங்கும் நிறுவனத்தின் பங்கு வடிவில் 26% ஆகும். BSV-ல் நிறுவனம் வைத்திருக்கும் மேற்கூறிய 26% பங்குகளை, M/s Bharat Serums and Vaccines Limited அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்களால், தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளைப் பெற்ற பிறகு வெளியீட்டு விலையில் வாங்குவதற்கு உண்டான நிபந்தனை பரிமாற்ற விதிமுறையில் இடம்பெற்றுள்ளது.

இந்த தொழில் நிறுவன விற்பனையின் மூலம் கிடைக்கும் லாபம் (உறுதியற்ற பின் நிகழ்வுகளுக்கு ரூ.1,500 லட்சங்களை வழங்கிய பிறகு) ரூ.76,429.45 லட்சம் ஆகும்.

(ii) மனித மருந்து செயல்பாடுகளின் லாபம்:

மனித மருந்துப் பிரிவின் மாற்றப்பட்ட தேதி மே 09, 2022 ஆம் தேதி வரை, இதனின் மொத்த வருமானம் ரூ.2,240.57 லட்சமாக இருந்தது (முந்தைய ஆண்டுகளில் இனி தேவையில்லாத சேதமான / காலாவதியான ஸ்டாக் ரிட்டர்ன்களுக்கான தள்ளுபடி ஒதுக்கீடு ரூ.1,132.29 லட்சம் சேர்ந்த) மற்றும் அதன் மொத்த செலவுகள் ரூ.1,026.10 லட்சம், இதன் விளைவாக ரூ.1,214.47 லட்சம் நிகர லாபம் கிடைத்தது.

(ஆ) நிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் வரிச் செலவுகள்:

பரிமாற்றத்தின் கணக்கில் ரூ.17,487.80 லட்சம் வரிச் செலவில், மேற்கூறிய பரிமாற்றத்தின் மீதான நீண்ட கால மூலதன ஆதாய வரிச் செலவான ரூ.17,831 லட்சம் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியான ரூ.343.20 லட்சம் ஆகும்.

மனித மருந்துப் பிரிவின் செயல்பாடுகளின் காலாண்டிற்கான லாபத்தின் மீதான வரிச் செலவு ரூ.503.89 லட்சம் ஆகும்.

(6) நிதியாண்டு 2021-22 குறித்த விதிவிலக்கான பொருட்கள்: செப்டம்பர், 2021-ல், நிறுவனமானது தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டம், பெருங்குடி கிராமத்தில் வைத்திருந்த 4.595 ஏக்கர் நிலத்தை விற்றதில் ரூ.249.05 லட்சம் லாபம் ஈட்டியுள்ளது.

(7) சமூக பாதுகாப்பு 2020 குறித்த குறியீட்டை நடைமுறைப்படுத்துதலால், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் பிற தொடர்புடைய பகுதிகளை குறித்தான நிறுவனத்தின் பங்களிப்புகளின்மேல் இதன் குறித்தான பாதிப்பிற்கு வாய்ப்புள்ளது. ஆயினும், அரசாங்கம் இதன் நடைமுறைப்படுத்துதலை ஏப்ரல் 01, 2021க்கு மேல் ஒத்திவைத்துள்ளது. இருப்பினும், நிறுவனமானது, ஆரம்ப மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் ரூ.350 லட்சத்தினை நிதி ஆண்டு 2020-21-ன் நான்காம் காலாண்டில் ஒதுக்கிவைத்துள்ளது. மேலும், விதிகளின் செயல்பாட்டிற்குப்பின் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க முன்மொழிகிறது.

(8) மார்ச் 31, 2022 இல் முடிவடைந்த காலாண்டின் புள்ளிவிவரங்கள், முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கும், சம்பந்தப்பட்ட நிதியாண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரை வெளியிடப்பட்ட ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளிவிவரங்களுக்கும் இடையிலான சமநிலை புள்ளிவிவரங்கள் ஆகும் மற்றும் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்விற்குட்பட்டது.

(9) முந்தைய காலங்கள் /ஆண்டின் புள்ளி விவரங்களானது தற்போதைய காலங்கள் / ஆண்டுக்கான வழங்கல்களுக்கு இசைவாக அவசியமான எல்லா இடங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்டு மற்றும் மறுவகைப்படுத்தப்பட்டது.

இடம்: சென்னை
தேதி: ஜூலை 26, 2022

டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்
டி டி ரகுநாதன்
செயல் துணைத்தலைவர்



## சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்

आज़ादी का अमृत महोत्सव

सी पी सी एल CPCL

(இந்திய அரசு நிறுவனம் மற்றும் இந்தியன் ஆயில் குழு நிறுவனம்)

பதிவு அலுவலகம்: 536, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018.

Website : www.cpcl.co.in ; Email id: investors@cpcl.co.in Tel: 044-24349833 / 24346807 CIN: L40101TN1965GOI005389

**ஜூன் 30, 2022ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்**

(ரூ. கோடியில்)

| வ. எண் | விவரங்கள் | தனியானது: முடிந்த 3 மாதங்கள் 30.06.2022 தணிக்கை செய்யாதது | 31.03.2022 தணிக்கை செய்தது | 30.06.2021 தணிக்கை செய்யாதது | முடிந்த ஆண்டு 31.03.2022 தணிக்கை செய்தது | ஒருங்கிணைந்தது: முடிந்த 3 மாதங்கள் 30.06.2022 தணிக்கை செய்யாதது | 31.03.2022 தணிக்கை செய்தது | 30.06.2021 தணிக்கை செய்யாதது | முடிந்த ஆண்டு 31.03.2022 தணிக்கை செய்தது |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 27449.52 | 20997.13 | 12797.39 | 60474.29 | 27449.52 | 20997.13 | 12797.39 | 60474.29 |
| | இதர வருமானம் | 3.94 | 13.33 | 1.78 | 23.66 | 3.94 | 13.34 | 1.78 | 17.74 |
| | மொத்த வருமானம் | **27453.46** | **21010.46** | **12799.17** | **60497.95** | **27453.46** | **21010.47** | **12799.17** | **60492.03** |
| | மொத்த செலவுகள் | 24254.16 | 19643.47 | 12725.32 | 58666.31 | 24254.20 | 19643.54 | 12725.34 | 58666.37 |
| 2 | நடப்பு காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 3199.30 | 1366.99 | 73.85 | 1831.64 | 3198.13 | 1374.49 | 76.77 | 1841.25 |
| 3 | நடப்பு காலத்திற்கான வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 3199.30 | 1366.99 | 73.85 | 1831.64 | 3198.13 | 1374.49 | 76.77 | 1841.25 |
| 4 | நடப்பு காலத்திற்கான வரிக்கு பின் லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 2358.79 | 994.42 | 53.73 | 1342.42 | 2357.62 | 1001.92 | 56.65 | 1352.03 |
| 5 | நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (நடப்பு காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது) | **2358.79** | **1017.66** | **53.73** | **1365.66** | **2357.62** | **1025.42** | **56.65** | **1375.53** |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10/–) | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | | | | 2391.28 | | | | 2587.78 |
| 8 | பத்திரங்களின் பிரீமியம் கணக்கு | | | | 250.04 | | | | 250.04 |
| 9 | நிகர மதிப்பு | | | | 2790.23 | | | | 2986.73 |
| 10 | செலுத்தப்பட்ட கடன் மூலதனம்/ மீட்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் நீங்கலாக நிலுவையில் உள்ள கடன் (பத்திரங்கள்/கடன் பத்திரங்கள்) | | | | 8722.70 | | | | 8722.70 |
| 11 | நிலுவையில் உள்ள மீட்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் (50,00,00,000 (2020: 50,00,00,000) மாற்ற முடியாத ஒட்டுமொத்த மீட்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் ஒவ்வொன்றும் ரூ.10/– (பட்டியலிடப்படாதது) | | | | 500.00 | | | | 500.00 |
| 12 | கடன் சம விகிதம் | | | | 3.31 | | | | 3.09 |
| 13 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | | | | |
| | (i) அடிப்படை (ரூ./பங்கு) | 158.40 | 66.78 | 3.61 | 90.15 | 158.32 | 67.28 | 3.80 | 90.80 |
| | (ii) பலமிழந்தது (ரூ./பங்கு) | 158.40 | 66.78 | 3.61 | 90.15 | 158.32 | 67.28 | 3.80 | 90.80 |
| 14 | மூலதன மீட்பு இருப்பு | | | | 700.00 | | | | 700.00 |
| 15 | கடன் சேவை பாதுகாப்பு விகிதம் | | | | 2.59 | | | | 2.60 |
| 16 | வட்டி சேவை பாதுகாப்பு விகிதம் | | | | 6.66 | | | | 6.69 |

குறிப்பு:

1. SEBI (விண்ணப்ப பட்டியல் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.com–ல் உள்ளது. கம்பெனியின் இணையதளம் www.cpcl.co.inலும் அவை உள்ளது.

குழுவின் ஆணைப்படி

இடம்: புதுடெல்லி
தேதி: ஜூலை 25, 2022

ராஜீவ் அயிலவாடி
இயக்குனர் (நிதி)
DIN No. 07826722



## ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்

ramco

பதிவு அலுவலகம்: 47, பிஎஸ்கே நகர், ராஜபாளையம்–626 108.
கார்ப்பரேட் அலுவலகம்: 64, சர்தார் பட்டேல் ரோடு, தரமணி, சென்னை–600 113.
CIN: L72300TN1997PLC037550 E-mail : investorRelations@ramco.com Website: www.ramco.com

ஜூன் 30, 2022–ல் முடிந்த காலாண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

| | விவரங்கள் | முடிந்த காலாண்டு: ஜூன் 30, 2022 தணிக்கையாகாதது Rs. Mln. | USD Mln. | மார்ச் 31, 2022 தணிக்கையானது (குறிப்பை பார்க்க) Rs. Mln. | USD Mln. | ஜூன் 30, 2021 தணிக்கையாகாதது Rs. Mln. | USD Mln. | முடிந்த ஆண்டு: மார்ச் 31, 2022 தணிக்கையானது Rs. Mln. | USD Mln. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 1,209.47 | 15.84 | 1,252.41 | 16.77 | 1,428.58 | 19.56 | 5,403.77 | 73.18 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டத்திற்கு முன்) | (503.41) | (6.59) | (290.49) | (3.91) | (60.36) | (0.82) | (733.07) | (9.93) |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)(விலக்கு அயிட்டத்திற்கு பின்) | (503.41) | (6.59) | (290.49) | (3.91) | (60.36) | (0.82) | (733.07) | (9.93) |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டத்திற்கு பின்) | (507.27) | (6.64) | (264.50) | (3.56) | (87.24) | (1.19) | (729.30) | (9.88) |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உள்ளடக்கியது) | (417.10) | (9.00) | (275.65) | (5.05) | (59.91) | (1.76) | (709.52) | (12.10) |
| 6. | சம பங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–) | 308.51 | 6.08 | 308.49 | 6.08 | 307.51 | 6.06 | 308.49 | 6.08 |
| 7. | நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள ரிசர்வுகள் (மறுமதிப்பீடு நீங்கலான ரிசர்வுகள்) | | | | | | | 5,497.69 | 71.03 |
| 8. | காலத்திற்கான ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டத்திற்கு முன் மற்றும் பின்) ரூபாய் மற்றும் அமெரிக்க டாலரில் ஒவ்வொன்றும் ரூ.10 (வருடாந்திரம் ஆண்டு கணக்கிற்கு மட்டும்) | | | | | | | | |
| | அடிப்படை | (16.45) | (0.22) | (8.58) | (0.12) | (2.91) | (0.04) | (23.87) | (0.32) |
| | பலமிழந்தது | (16.45) | (0.22) | (8.58) | (0.12) | (2.91) | (0.04) | (23.87) | (0.32) |

குறிப்பு

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் கம்பெனியின் இணையதளம் www.ramco.com மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் என்எஸ்இ இணையதளம் www.nseindia.com–ல் உள்ளது.
2. ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட், இந்தியா (''கம்பெனி''), அதன் துணை நிறுவனங்கள் (ஒன்றாக 'குழு' என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் அதன் அசோசியேட்டின் மேற்கண்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு ஜூலை 26, 2022 அன்று நடைபெற்ற இயக்குநர் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. பொருந்தகூடிய விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தர நிலைகள் (இன்ட் ஏஎஸ்)ன் படி ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குழுமத்தின் ஜூன் 30, 2022ல் முடிந்த காலாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை சட்ட தணிக்கையாளர்கள் தணிக்கை மேற்கொண்டு அவர்களது மாற்றப்படாத ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளனர்.
3. ஜூன் 30, 2022–ல் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் தனியான நிதிநிலை முடிவுகளின் முக்கிய விவரம்

ரூ. மில்லியனில்

| விவரங்கள் | முடிந்த காலாண்டு: ஜூன் 30,2022 தணிக்கையாகாதது | மார்ச் 31, 2022 தணிக்கையானது (குறிப்பை பார்க்க) | ஜூன் 30,2021 தணிக்கையாகாதது | முடிந்த ஆண்டு: மார்ச் 31, 2022 தணிக்கையானது |
|---|---|---|---|---|
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 641.11 | 733.34 | 710.90 | 2,900.08 |
| வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்) | (256.94) | (189.44) | (61.49) | (583.62) |
| வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) | (256.52) | (155.53) | (61.49) | (499.71) |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உள்ளடக்கியது) | (269.19) | (169.41) | (66.18) | (517.50) |

4. நடப்பு காலத்திற்கான கணக்குகளுடன் ஒப்பிட எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கடந்த கால கணக்குகளுடன் மறுவகைபடுத்தப்பட்டுள்ளன. மார்ச் 31, 2022ல் முடிந்த காலாண்டு கணக்குகள், மார்ச் 31, 2022–ல் முடிந்த முழு நிதி ஆண்டுக்கான தணிக்கையான முடிவுகள் மற்றும் டிசம்பர் 31, 2021ல் முடிந்த மூன்றாவது காலாண்டுக்கான வெளியிடப்பட்ட கணக்குகள் இடையே சமன் செய்யப்பட்டவையாகும்.

குழு உத்தரவுப்படி
ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்டிற்காக
P.V. அபினவ் ராமசுப்ரமணியம் ராஜா
முழு நேர இயக்குனர்

இடம்: சென்னை
தேதி: ஜூலை 26, 2022